**(Sowmya is the daughter of our close family friend and Sri Vidya Guru Shri Raghu Ranganathan and Akhila Ranganathan. She married Rajesh and this Vazhthumadal was presented to them during their Reception at SVBF on 19-Oct-2013)**

# வாழ்த்துமடல் - A NOTE OF WELL WISHES (TAMIL AND ENGLISH)



அன்புள்ள சௌம்யா...அன்புள்ள ராஜேஷ்...

உங்களின் இந்தத் திருமண வரவேற்பில் கலந்துக் கொண்டு
உங்களுக்கு ஏதாவது பரிசளிக்க வேண்டும் என்ற எண்ணம் எழுந்த பொழுது
என் மனதிற்க்கு உடனே தோன்றியது ஒரு சிறிய வாழ்த்து மடல்...
எனக்கு நன்கு பரிச்சியப்பட்ட, எனக்குப் பிடித்த ஒரு விஷயம்...
உங்களுக்கு வாழ்த்து மடல் எழுதவேண்டும் என்று எண்ணியப்போது
மனதில் இனம் புரியாத ஒரு சந்தோஷம்...கர்வம்...
அதுவும் உன்னை இத்தனை
வருடங்களாக பார்த்துப்பழகிப் புரிந்தவள் நான் என்ற ஒரு உரிமையில்...

அழகான ஒரு கவிதையாய் அருமையாக ஆரம்பம் ஆனது நம் நட்பு
பல வருடங்களுக்கு முன்பு தெய்வீகமான ஒரு நவராத்திரி நாளில்
நீ உன் பெற்றோருடன் எங்கள் இல்லத்திற்க்கு வந்து அற்புதமாக பாடிய
தீக்ஷிதரின் நவாவர்ண க்ருதி என் செவிகளில் இன்னும் ரீங்காரம்
இட்டுக்கொண்டு த்தான் இருக்கிறது...

பல பரிச்சியங்கள்...பல சந்திப்புகள்...பல நிகழ்வுகள்...என்று தொடங்கி
ஆலவிருக்ஷமாக வேரூன்றி தழைக்கத்தொடங்கிய இந்த நட்பு...
மேன்மேலும் மெருகு பெற்று வலுப்பெற்று
இன்று நறுமணம் கமழும் புஷ்பங்களுடன்
ஒரு புதிய பரிமாணத்தில் கம்பீரமாக...
இந்த பந்தம் என்றும் தொடரும்...தொடரவேண்டும்...

பேருக்கு ஏற்றாற்போல் தீக்ஷிண்யமான அறிவுடன் சௌம்யமாக நீ...
உன்னைப் புரிந்து உனக்கு ஏற்றாற்போல் உன் துணை ராஜேஷ்...
உன் உள்ளம் கவர் கள்வன் ஆகிப்போனவன்...
தன்னைப் பற்றிய தேடலில் தன்னை நன்கு புரிந்து...
தான் யார் என்று அவன் எழுதிய சுயவிமர்சனத்தைப் படித்து வியந்த
தருணங்கள் பல பல..

எத்தனை ஆரோக்யமான எண்ணங்கள்...
குழப்பமே இல்லாத சிந்தனைகள்...
இது தான் நான் என்று கர்வத்துடன் தன்னைப்பற்றி பறைசாற்றிக் கொண்ட
விதத்தில் ... என் மனதில் ஒரு உயர்ந்த ஸ்தானத்திற்க்குப் போனவன்...
நீ உன் கைலாய பயணத்தைப் பற்றி எழுதியதை நான் படித்தபோது ஏற்பட்ட
அதே நிறைவு அவன் தன்னைப் பற்றி எழுதியதில் எனக்கு ஏற்பட்டது...
அவ்வளவு அருமையாய் பெருமைப்படும்படி அவன் பெற்றோரின்
வளர்ப்பு...
அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியை இங்கு சொல்லியே
ஆகவேண்டும்...

நீ வளர்ந்து ஒரு அற்புதமான பெண்ணாக வலம் வந்த பொழுது,
உன்னைப் புரிந்து உன் குடும்பத்தை நன்கு உணர்ந்து,
உனக்கு ஏற்றாற்போல் ஒரு ராஜகுமாரன் வரவேண்டுமே
என்று பலமுறை எண்ணியதுண்டு...
அந்த எண்ணம் பொய்யாகா வண்ணம்...
எத்தனை அருமையான ஒரு துணை உனக்கு...
உன் மனதுபடி ஏற்படுத்திக்கொண்ட உன் துணை...

பொறுமைக்கும் ஒரு எல்லை உண்டு என்பதை பொய்யாக்கிய பெருமை அவனுக்கு...
உங்களின் விரிவான மூன்று நாள் திருமணத்தின் போது,
அதை நேரில் கண்டு உண்மையாகவே வியந்துத்தான் போனேன்...
பெருமைப்படுகிறேன்உங்கள் இருவரை கண்டு...

காதலில் ஒருவனை கைப்பிடித்தே, அவன் காரியம் யாவிலும் கை கொடுத்தே
என்ற எனது தமிழ் ஆசான் பாரதியின் அற்புதமான வரிகள் மெய்ப்பட...
உன்னையே தன் ரதியாகவும்,தன் ஸகியாகவும் ஏற்ற ராஜேஷூடன்
உன் திருமண வாழ்வு வளம் பெற,
நீங்கள் ஒருவரை ஒருவர் புரிந்து என்னுள் நீ, உன்னுள் நான் என்று ஒருமித்த தம்பதிகளாய்...
உங்களின் இந்த ஆத்மார்த்தமான காதல் என்றும் தொடர்ந்து
உங்கள் வாழ்விற்கு மேன்மேலும்
அழகும் மெருகும் சந்தோஷமும் சேர்க்கவேண்டும் என்று
எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்!!!!

வாழ்த்துக்கள் ராஜேஷ்!!வாழ்த்துக்கள் சௌம்யா!!

அன்புடன்
GAYATHRI RAMESH
GRD IYERS
(19-10-2013)

Dear Sowmya….Dear Rajesh

As I indulge myself in your grand wedding reception…
The desire to gift you something unique arose in my heart…
My heart's instinct was to pen verses of blessings for your well-being…
Well beknownst to me and loved by me is the spontaneous penning of words…
As desire took wings to pen those verses…
Did I feel inexplicable joy…and pride…
A right I lovingly exercise based on years of ourwarm relationship…
Our friendship bloomed akin to the bursting forthof sublime poetry…

On a divine day of Navrathri several years ago…
Did you come to our home with your parents and soulfully render…
Dikshitar's Navavarna delightful composition that still resounds in my ears…

Several perceptions…several meetings…several events…starting thus…
Banyan-like, taking strong roots and flourishing, our friendship…
With time, forever acquiring dazzling brilliance and immense depth…
Today, as blooming flowers with their fragrance…wafting and enveloping…
Acquiring new and dignified dimensions…
Let this heavenly bonding flourish for ever…it must flourish…

So as your name, is your nature…innate luminosity personified…
Knowing you…understanding you…A fitting match for you is Rajesh..
Stealer of your heart..but leaving you richer for it…
A constant soul searcher in pursuit of perennial refinement…he understands you well
His self-introduction had amazed one and all…

Brimming with countless healthy thoughts and noble intentions galore…
Thoughtful musings…uncluttered…unsoiled…pristine…
Confidence and quiet pride evident in the manner of declaration of his own self…
He effortlessly scaled new heights of deepening respect in my heart and mind…
His gems of self-musings furnished the same sense of fulfilment that I thrilled in when soaking in your Kailash travelogue…
His parents can take unabashed pride in their enchanting parenting and skilful sculpting and chiselling of his personality…
Praise them I must…convey my heartfelt gratitude I must…

As you bloomed into a comely lass, loveliest of them all…
Understanding you…appreciating your family…in a manner most perceptive…
A befitting prince must descend from the heavens above to sweep you off your feet…such had been my constant prayer and expectation…
That expectation was not belied…the prayer did not go unanswered…

What a charming and delightful soul mate now you have!
Who arrived in response to your heart beats..gently stilling your soul's yearning…
Defying the notion that patience has its limits…this man of limitless patience…
During the triad of days of your traditional wedding most detailed,
Which I truly marvelled at having seen it throughthese mine eyes…
A feeling of immense pride overwhelms me when myeyes thirstily imbibe you both…

Holding his hands tight…lending your fair arms to his pursuits noble…
Those beautiful words of my preceptor Mahakavi Bharati never rang ever so more truly than today…
As Rajesh's Venus...his Aphrodite..his soul mate…
May your life in wedlock bloom in abundance…
Dyad mortals are you but one infinite soul…
May you blossom as a peerless couple…
May your soulful love flow perennially…
May your wedded life prosper abundantly…
May your lives be enriched with the warmth of beauty, harmony and unbridled joy…
Thus does my heart pray fervently to the Almighty!

My hearty congratulations – Rajesh and Sowmya!

With fond love
GAYATHRI RAMESH
GRD IYERS